
# திருப்பல்லவனீச்சரத் திருப்பதிகங்கள்

தருமபுர ஆதீனம்.



திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்
25-வது மகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

வெளியீடு எண் 103.

உ

குருபாதம்

திருச்சிற்றம்பலம்

# திருப்பல்லவனீச்சரத் திருப்பதிகங்கள்

இது

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்

௨௫-வது மகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த

பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

திருவுள்ளத்தின்படி

வெளியிடப்பெற்றது.

தருமபுர ஆதீனம்

1946

# பதிப்புரை

திருக்கயிலாயபரம்பரைத் தருமபுர ஆதீனம் உடு-வது மகாசந்நிதானம் **ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்** சமய வளர்ச்சி கருதி ஆற்றி வரும் பணிகள் பலவாகும். அவைகளுள் திருப்பதிகங்கள் கொண்ட 274 சிவஸ்தலங்களிலும் ஆதீனச் சார்பில் சிறப்பாக அபிஷேக ஆராதனைகள் செய்வித்து, அந்தந்தத் தலப்பதிகங்களையும் ஆங்காங்கு முறைப்படி ஒதுவித்து, ஆராதனை முடிவில் அத்தலப்பதிகங்கள் அடங்கிய புத்தகங்களை அன்பர்கட்கு வழங்குதலும் ஒன்றாகும். ஆதலின் அவர்கள் திருவுள்ளப்பாங்கின்படியே **திருப்பல்லவனீச்சரத் திருப்பதிகங்கள்** என்னும் இந்நூல் ஆதீன வெளியீடாக வெளிவந்துள்ளது. அன்பர்கள் பதிகங்களைப் பாராயணஞ்செய்து **ஸ்ரீ பல்லவவேசுவரர்** திருவருளால் எல்லாநலங்களும் பெற்று உய்வார்களாக.

# தலச்சிறப்பு

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகள், சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆகிய சைவசமய பரமாசாரிய மூர்த்திகள் மூவர்களாலும் திருவாய் மலர்ந்தருளப் பெற்ற திருப்பதிகங்கள்கொண்டு விளங்கும் தலங்கள் இருநூற்றெழுபத்துநான்காகும். அதனுள் காவிரி வளம்பெறும் சோழநாட்டுத் தலங்கள் நூற்றுத்தொண்ணூறாகும். அதனுள்ளும் காவிரியின் வடகரைத் தலங்கள் அறுபத்துமூன்று. அதனுள் பத்தாவதாக எண்ணப்பட்டு விளங்குவதே பல்லவனீச்சரம் என்னும் இத்திருத்தலம். திருப்பதிகத்தில் பட்டினத்துறை பல்லவனீச்சரம் என்று குறிப்பிடப்பெற்றிருத்தலால் தேவார ஆசிரியர்கள் காலத்தில் நகர் காவிரிப்பூம்பட்டினம் என்றும், ஆலயத்தின்பெயர் பல்லவனீச்சரம் என்றும் வழங்கியதாகத் தெரிகிறது. பல்லவ

அரசன் பூசித்து வழிபடப்பெற்றதால் இப் பெயர்பெற்றது.

பாரனைத்தும் பொய்யெனத் துறந்த பட்டினத்துப் பிள்ளையாரும், அந்தண வேடங் கொண்டு தன்னிடம் வந்து மனைவியைக் கேட்ட இறைவனுக்கு அவ்வாறே கொடுத்து 'பனிமலர்க்குழற் பாவைநல்லாரினும் இனியன் இறைவன்' என்ற திருநெறித் தமிழ்மறை வாக்கிற்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கிய இயற்பகை நாயனாரும் அவதரிக்கும்படியான பேற்றினைப்பெற்று விளங்கியது இத் திருத் தலமேயாம். இறைவன் திருநாமம் பல்லவனேசுவரர். இறைவி திருநாமம் சௌந்தரநாயகி. திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகங்கள் இரண்டு இத்தலத்திற்கு உள்ளன.

காவிரி சங்கமஸ்நானம் செய்யச்செல்கின்றவர்கள் திரும்பும்பொழுது வழியிலுள்ள இத் தலத்தையும் வழிபட்டுச் செல்கின்றார்கள். ஆலயம் மிக அழகியது.

## தலம் இருக்குமிடம்

தஞ்சை ஜில்லா சீகாழிதாலுக்காவில் திருவெண்காடு என்னும் திருத்தலத்திற்குத் தென்கிழக்கே 2½-கல் தொலைவிலிருக்கிறது. செம்பொன்னார்கோயில், ஆக்கூர் ஆகிய இருப்புப்பாதை நிலையங்களில் இறங்கி மட்சாலை வழியாகச் செல்லலாம்.

## தலப்பதிகம் அருளிச்செய்த திருஞானசம்பந்த சுவாமிகள் சிறப்பு

திருஞானசம்பந்தர் சீகாழிப்பதியிலே அவதரித்தவர். தந்தையார் . சிவபாதவிருதயர்; தாயார் பகவதியம்மையார். தமது மூன்றாம் பிராயத்திலே அம்மே! அப்பா!! என்றழுது, உமையம்மையாரால் அளிக்கப்பெற்ற ஞானப் பாலைக் குடித்து, சிவனடியே சிந்திக்கும் திருப் பெருகு சிவஞானம் பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம் உவமையிலாக்

கலைஞானம் ஆகிய யாவும் கைவரப்பெற்றார். அதனால் திருஞானசம்பந்தராயினர். திருக் கோலக்காவில் பொற்றாளங்கள் பெற்றார். மாறன்பாடியில் அயர்ந்திருந்தபோது திரு நெல்வாயிலரத்துறைநாதரது திருவருளால் முத்துச்சிவிகை, குடை, சின்னங்கள் முதலி யன பெற்றார். திருப்பாச்சிலாச்சிராமத்தில் கொல்லிமழவன் மகளுக்கு ஏற்பட்ட முய லகன் என்னும் கொடிய பிணியை நீக்கி யருளினர். திருக்கொடிமாடச் செங்குன் றூரில் தன்னுடன்வந்த சிவனடியார் குழாங் களுக்கு உண்டாகிய நோயினையும் அகற்றி னர். திருப்பட்டீச்சரத்தில் முத்துப்பந்தலும் பெற்றார்.

திருவாவடுதுறையில் எழுந்தருளியிருக்குங் காலத்தில் வேள்விசெய்தற் பொருட்டுப் பொருள் வேண்டுமென்ற தந்தையாருக்கு, திருவருளால் பசும்பொன் ஆயிரக்கிழியொன்று பெற்றளித்தார். திருமருகலில் விடத்தினல்

உயிர்துறந்த வணிகனை உயிர்ப்பித்தருளினர். பாண்டிநாடு சென்று அனல்வாதம் புனல் வாதம் முதலியவற்றால் சமணர்களை வாதில் வென்று திருநீற்றொளி விளங்கச்செய்தார். திருப்பூந்துருத்திக்குச் சென்ற காலத்தில், ஆங்கு ஓர் திருமடங்கட்டுவித்து அதன்கண் தங்கியிருந்த திருநாவுக்கரசு சுவாமிகள் சிவிகைதாங்கி வருவதை அறிந்து உடன் கீழிழிந்து எதிர்வணங்கி உடனுறைந்தருளினர். திருவோத்தூர் என்னும் திருப்பதியில் ஆண்பனைகளைப் பெண்பனைகளாக்கினர்.

திருமயிலாப்பூரில், சிலநாட்களுக்குமுன்பே அரவம் தீண்டுதலால் உயிர்நீத்த பூம்பாவை என்னும் வணிகமகளது எலும்பு நிறைந்த குடத்தை இறைவன்முன் வைத்து வணங்கி, திருப்பாசுரம் அருளி, இறந்த அம் மகளை முன்னைய நிலைமையைக் காட்டிலும் மிக்க அழகுள்ளவளாய் அக் குடத்தினின்றும் எழும்படிச் செய்தார். திருவீழிமிழலையில்

ள்ழுந்தருளியிருக்குங் காலத்து அடியார்கள் பஞ்சத்தினுல் வருந்துதலைக் கண்டு, பெருமானிடம் விண்ணப்பித்து, படிக்காசுபெற்று, 'அடியார்கள் விருந்துண்பதற்குவருக' எனப் பறைநிகழ்வித்து அறுசுவையோடு கூடிய திருவமுதை யாவர்க்கும் அளித்தார்.

'நல்லிசை ஞானசம்பந்தன்' 'நற்றமிழ்வல்ல ஞானசம்பந்தன்', 'நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பும் ஞானசம்பந்தன்' 'எம்பிரான் சம்பந்தன்' என்பன சுந்தரமூர்த்திசுவாமிகள் திருவாக்கு.

சிவமயம்

# திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் திருப்பதிகங்கள்

## பண் - தக்கேசி

திருச்சிற்றம்பலம்

அடையார்தம் புரங்கண்மூன்று மாரழலில்லழுந்த
விடையார்மேனி யராய்ச்சீறும் வித்தகர்மேயவிடங்
கடையார்மாட நீடியெங்குங் கங்குல்புறந்தடவப்
படையார்புரிசைப் பட்டினஞ்சேர் பல்லவனீச்சரமே. க

எண்ணாரெயில்கண்மூன்றுஞ்சீறுமெந்தைபிரானிமையோர்
கண்ணாயுலகங் காக்கநின்ற கண்ணுதனண்ணுமிடம்
மண்ணார்சோலைக் கோலவண்டு வைகலுந்தேனருந்திப்
பண்ணார்செய்யும் பட்டினத்துப் பல்லவனீச்சரமே. உ

மங்கையங்கோர் பாகமாக வாணிலவார்சடைமேற்
கங்கையங்கே வாழவைத்த கள்வனிருந்தவிடம்
பொங்கயஞ்சேர் புணரியோத மீதுயர்பொய்கையின்மேற்
பங்கயஞ்சேர் பட்டினத்துப் பல்லவனீச்சரமே. ௩

தாரார்கொன்றை பொன்றயங்கச் சாத்தியமார்பகலம்
நீரார்நீறு சாந்தம்வைத்த நின்மலன்மன்னுமிடம்
போரார்வேற்கண் மாதர்மைந்தர் புக்கிசைபாடலினாற்
பாரார்கின்ற பட்டினத்துப் பல்லவனீச்சரமே. ௪

மைசேர்கண்ட ரண்டவாணர் வானவருந்துதிப்ப
மெய்சேர்பொடிய ரடியாரேத்த மேவியிருந்தவிடங்
கைசேர்வளையார் விழைவினோடு காதன்மையார்கழலே
பைசேரரவா ரல்குலார்சேர் பல்லவனீச்சரமே. ௫

குழலினோசை வீணைமொந்தை கொட்டமுழவதிரக்
கழலினோசை யார்க்கவாடுங் கடவுளிருந்தவிடஞ்
சுழியிலாருங் கடலிலோதந் தெண்டிரைமொண்டெறியப்
பழியிலார்கள் பயில்புகாரிற் பல்லவனீச்சரமே. ௬

வெந்தலாய வேந்தன்வேள்வி வேரறச்சாடிவிண்ணோர்
வந்தெலாமுன் பேணநின்ற மைந்தன்மகிழ்ந்தவிடம்
மந்தலாய மல்லிகையும் புன்னைவளர்குரவின்
பந்தலாரும் பட்டினத்துப் பல்லவனீச்சரமே. ௭

தேரரக்கன் மால்வரையைத் தெற்றியெடுக்கவவன்
ரூரரக்குந் திண்முடிக ளூன்றியசங்கரனார்
காரரக்குங் கடல்கிளர்ந்த காலமெலாமுணரப்
பாரரக்கம் பயில்புகாரிற் பல்லவனீச்சரமே. ௮

அங்கமாறும் வேதநான்கு மோதுமயனெடுமால்
தங்கணாலு நேடநின்ற சங்கரன்றங்குமிடம்
வங்கமாரு முத்தமிப்பி வார்கடலூடலைப்பப்
பங்கமில்லார் பயில்புகாரிற் பல்லவனீச்சரமே. ௯

உண்டுடுக்கை யின்றியேநின் றூர்நகவேதிரிவார்
கண்டுடுக்கை மெய்யிற்போர்த்தார் கண்டறியாதவிடந்
தண்டுடுக்கை தாளந்தக்கை சாரநடம்பயில்வார்
பண்டிடுக்கண் டீரநல்கும் பல்லவனீச்சரமே. ௧௦

பத்தரேத்தும் பட்டினத்துப் பல்லவனீச்சரத்தெம்
அத்தன்றன்னை யணிகொள்காழி ஞானசம்பந்தன்சொற்
சித்தஞ்சேரச் செப்புமாந்தர் தீவினைநோயிலராய்
ஒத்தமைந்த வும்பர்வானி லுயர்வினொடோங்குவரே. ௧௧

திருச்சிற்றம்பலம்.

ஈரடி. பண் - பழம்பஞ்சுரம்

திருச்சிற்றம்பலம்

பரசுபாணியர் பாடல்வீணையர்
பட்டினத்துறை பல்லவனீச்சரத்
தரசுபேணி நின்றா
ரிவர்தன்மை யறிவாரார். க

பட்டநெற்றியர் நட்டமாடுவர்
பட்டினத்துறை பல்லவனீச்சரத்
திட்டமா யிருப்பா
ரிவர்தன்மை யறிவாரார். உ

பவளமேனியர் திகழுநீற்றினர்
பட்டினத்துறை பல்லவனீச்சரத்
தழகரா யிருப்பா
ரிவர்தன்மை யறிவாரார். ௩

பண்ணில்யாழினர் பயிலுமொந்தையர்
பட்டினத்துறை பல்லவனீச்சரத்
தண்ணலா யிருப்பா
ரிவர்தன்மை யறிவாரார். ௪

பல்லிலேர்ட்டினர் பலிகொண்டுண்பவர்
பட்டினத்துறை பல்லவனீச்சரத்
தெல்லியாட் டுகந்தா
ரிவர்தன்மை யறிவாரார். ௫

பச்சைமேனியர் பிச்சைகொள்பவர்
பட்டினத்துறை பல்லவனீச்சுரத்
திச்சையா யிருப்பா
ரிவர்தன்மை யறிவாரார். ௬

பைங்கணேற்றினர் திங்கள்சூடுவர்
பட்டினத்துறை பல்லவனீச்சரத்
தெங்குமா யிருப்பா
ரிவர்தன்மை யறிவாரார். ஏ

பாதங்கைதொழ வேதமோதுவர்
பட்டினத்துறை பல்லவனீச்சரத்
தாதியா யிருப்பா
ரிவர்தன்மை யறிவாரார். அ

படிகொண்மேனியர் கடிகொள்கொன்றையர்
பட்டினத்துறை பல்லவனீச்சரத்
தடிகளா யிருப்பா
ரிவர்தன்மை யறிவாரார். கூ

பறைகொள்பாணியர் பிறைகொள்சென்னியர்
பட்டினத்துறை பல்லவனீச்சரத்
திறைவரா யிருப்பா
ரிவர்தன்மை யறிவாரார். க0

வானமாள்வதற் கூனமொன்றிலை
மாதர்பல்லவ னீச்சரத்தானை
ஞானசம்பந்த னற்றமிழ்
சொல்லவல்லவர் நல்லவரே. கக

திருச்சிற்றம்பலம்.



ஞானசம்பந்தம் பிரஸ், தருமபுரம், C. 500. 26—3—46.